www.penakural.com
மலர்: 02 இதழ்: 11 செப்டம்பர் 2024 விலை: ₹ 20/-
RNI No.:
TNTAM / 2022 / 85375

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

Scan and visit the website



# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ சாத்தியமா?

# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




CONTACT US

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 11 செப்டம்பர் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**

இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, P.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், K.சுபுலட்சுமி, S.ஜெயராஜ்**

புகைப்பட நிருபர்கள்:
**V.கவியரசன், K.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:
**044-35906002, 9962245338**
**info@penakural.com**
**penakural@yahoo.com**
**www.penakural.com**



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *


ஆசிரியர் குரல்

# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ சாத்தியமா?

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ முறைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பான சட்டம் விரைவில் கொண்டு வரப்படலாம். பார்லிமென்டின் இரு அவைகளிலும் பா.ஜ., கூட்டணிக்கு தனிப்பெரும்பான்மை உள்ளது. என்றாலும் 3 ல் 2 பங்கு ஆதரவு தேவை.

1951 முதல் 1967 வரை லோக்சபா, சட்டசபை தேர்தல்கள் ஒரே நேரத்திலேயே நடத்தப்பட்டன. நாட்டின் முதல் கம்யூனிஸ்ட் ஆட்சியான, நம்பூதிரிப்பாடு தலைமையிலான கேரள அரசை 1959 ல் கலைத்தது காங்கிரஸ் அரசு. பிறகு கேரளா சட்டசபைக்கு தனியாக 1960ல் தேர்தல் நடந்தது.

இப்படி பல மாநிலங்களில், காங்., ஆட்சியில் சட்டசபைகள் கலைக்கப்பட்டன. மத்தியிலும் ‘தொங்கு பார்லிமென்ட்கள்’ அமைந்தன. இதனால் மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே நேரத்தில் தேர்தல் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாமல் போனது. இப்போது இவற்றிற்கெல்லாம் முடிவு கண்டு சட்டத்திருத்தங்களை ஏற்படுத்தி ஒரே நேரத்தில் தேர்தல் என்பதை நடைமுறைக்கு கொண்டுவர முயற்சி நடக்கிறது.

இந்தியாவில் இந்தமுறை ஏற்கனவே அமலில் இருந்தது தான். தற்போது தேர்தல் அறிவித்தாலே நன்னடத்தை விதிகள் இரண்டு மாதங்களுக்கு மேல் கூட அமல்படுத்தப்படுகிறது. அரசு பணிகள் எதுவும் நடக்காது. நம் நாட்டின் மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது அடிக்கடி தேர்தல் நடத்துவது என்பது செலவு பிடிக்கும் விஷயம். தேர்தலுக்கு ஆறு மாதம் முன்பாகவே தயாராக வேண்டும், ஓட்டு மெஷின்களை பராமரிக்க வேண்டும், மனிதவளத்தை அதிகப்படுத்துவதோடு துணை ராணுவப்படையை தயார் செய்ய வேண்டும். மக்களுக்கும் பல்வேறு அசவுகரியங்களும், அரசுக்கு நிர்வாக சிக்கல்களும் ஏற்படுவதை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது. அதுபோல் பல கோடிகள் தேர்தலுக்காக செலவிடப்படுகிறது. ஒரு மாநிலத்தில் இரண்டு முறை தேர்தல் நடத்துவதை விட ஒரே நேரத்தில் நடத்தினால் செலவும் குறையும். நேரம் மிச்சமாகும். ஊழலும் வெகுவாக குறையும்.

தேர்தல் நேரத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு தேர்தல் பணிகள் ஒதுக்கப்படுகிறது. மாதக் கணக்கில் கல்வியும் பாதிக்கிறது. ஒரே நேரத்தில் தேர்தல் என்பது தேர்தல் கமிஷன், மத்திய, மாநில அரசுகளுக்கு நிர்வாக ரீதியாக எளிதாக தான் இருக்கும். அதேநேரம் அதிக எண்ணிக்கையில் மனித சக்திகளும் தேவையாக இருக்கும். இந்த திட்டத்தை 2029ல் இருந்து மத்திய அரசு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில், மாநிலங்கள் வாரியாக அதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களுக்கும் சரியான தீர்வையும் மத்திய அரசு வைத்திருக்க வேண்டும்.

– ஆசிரியர்

# அனைத்து சாதி அர்ச்சகர்களை அவமதிக்கும் பரம்பரை அர்ச்சகர்கள்:

# நடவடிக்கை கோரும் மருத்துவர்ராமதாஸ்





கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு 2006-11 ஆட்சிகாலத்தில் கொண்டுவந்த அனைத்து சாதியினரும் அர்ச்சராகலாம் என்ற திட்டத்தை, 2021-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசு நடைமுறைப்படுத்தியது.

இந்த நிலையில், அனைத்து சாதி அர்ச்சகர்களை பரம்பரை அர்ச்சகர்கள் அவமானப்படுத்துவதாகவும், தி.மு.க அரசு அதனை வேடிக்கை பார்ப்பதாகவும் பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கடுமையாக சாடி-யிருக்கிறார்.

இது குறித்து ராமதாஸ் தனது அறிக்கையில், ``அனைத்து சாதி அர்ச்சகர்கள் திட்டத்தின்படி தமிழ்நாட்டின் பல்வேறு கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அவமதிக்கப் படுவதாகவும், வழிபாடு நடத்துவதற்கு பதிலாக கோயில்களை தூய்மைப்படுத்தும் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. இந்த தீண்டாமைக்கு முடிவு கட்ட வேண்டிய அரசு, இந்த அநீதியை ஊக்குவிப்பது கண்டிக்கத்தக்கது.

அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தின் நியமிக்கப்பட்ட 24 அர்ச்சகர்களில் 10 பேர் `தங்களை கருவறைக்குள் செல்ல அங்குள்ள பரம்பரை அர்ச்சகர்கள் விடுவதில்லை. கோயிலை சுத்தம் செய்யும் பணிதான் வழங்கப்படுகிறது. எந்தக் கோயிலுக்கு அர்ச்சகர்களாக நியமனம் செய்யப்பட்டோமோ, அதை விடுத்து பக்தர்களே வராத கோயில்களுக்கு அனுப்பப்படுகிறோம். பரம்பரை அர்ச்சகர்கள் எங்களை அவமானப்படுத்துகின்றனர்' என்று குற்றஞ் சாட்டியதாக நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது. இதுபற்றி அதிகாரிகளிடம் புகார் செய்தால், அவர்களும் பரம்பரை அர்ச்சகர்களுடன் இணைந்து

எங்களை அவமானப்படுத்துகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவிடம் புகார் செய்த போதிலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்றும் பாதிக்கப்பட்ட அனைத்து சாதி அர்ச்சகர்கள் கூறியுள்ளனர். அனைத்து சாதி அர்ச்சகர் திட்டம் 2006-11 தி.மு.க ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது. அதை எதிர்த்து நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளால் முடக்கப்பட்டிருந்த இத்திட்டம், வழக்குகள் அனைத்தும் முறியடிக்கப்பட்ட நிலையில், 2021 ஆகஸ்ட் 14-ம் தேதி நடைமுறைக்கு வந்தது. இந்தத் திட்டம் தந்தை பெரியாரின் கனவு என்றும், இதன்மூலம் தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் அகற்றப்பட்டதாகவும் அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்த மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார்.

ஆனால், பல ஆண்டு போராட்டத்திற்குப் பிறகு அர்ச்சகர் ஆக்கப்பட்ட இடைநிலை சாதியினருக்கு உரிய அங்கீகாரத்தையும், மரியாதையையும் பெற்றுத் தர தமிழக அரசு தவறிவிட்டது. இதுதான் தி.மு.க அரசின் மிகப்பெரிய சமூக அநீதி. தமிழக அரசு நினைத்தால், அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தில் நியமிக்கப்பட்டவர்கள்தான் கருவறையில் அர்ச்சனை செய்வார்கள் என்று அறிவித்திருக்கலாம். ஆனால், அதை செய்யவில்லை. இதுதொடர்பாக அமைச்சரிடமும், அதிகாரிகளிடமும் அளிக்கப்பட்ட புகார்கள்மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்குக் காரணம் பரம்பரை அர்ச்சகர்களைக் கண்டு அரசு அஞ்சுவதுதான்.

இப்படிப்பட்டவர்கள் அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தை செயல்படுத்தியிருக்க வேண்டியதில்லை. இந்தத் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம் பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் அகற்றப்பட்டு விட்டது என்று ஆட்சியாளர்கள் கூறினார்கள். ஆனால், அனைத்து சாதி அர்ச்சகர்கள் அவமானப்படுத்தப்படுவதை வேடிக்கைப் பார்ப்பதன் மூலம் தந்தை பெரியாரின் நெஞ்சில் ஈட்டியைக் குத்தியிருக்கிறது திராவிட மாடல் அரசு. இதற்கு பரிகாரம் காணும் வகையில், இன்னும் அதிக எண்ணிக்கையில் அனைத்து சாதி அர்ச்சகர்களை நியமித்து அவர்களுக்கு கருவறையில் பூசை செய்யும் அதிகாரத்தை அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

**– துரை. சந்துரு**



முத்துப்பேட்டை பகுதியில் 50 ஹெக்டேர் பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள அலையாத்தி காடுகளில், 'தமிழ் வாழ்க' எனும் சொற்களின் வடிவில் வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. 9 ஹெக்டேர் பரப்பில் 3 ஆயிரத்து 962 மீட்டர் நீளத்தில் இந்த வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. **– பி.ஸ்டாலின்**

# ஊடகங்கள் தனிநபர் அணுகுமுறையிலிருந்து விலகி நிறுவனங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்

இந்தியாவுக்கு எதிராக தீய எண்ணங்களை கொண்டிருப்பவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டாம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் இன்று எச்சரித்தார். தேசத்திற்கு விரோதமான சக்திகளால் முன்வைக்கப்படும் சவால்களை எடுத்துரைத்தார். “பாரதத்திற்கு விரோதமானவர்கள் என்று நிலைப்பாடு கொண்டவர்களுடன் நாம் சகோதரத்துவம் கொள்ள முடியாது. அவர்கள் பாரதத்திற்கு சவால்களை வழங்க விழைகிறார்கள் என்று கூறினார்

நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் சில தனிநபர்கள் இந்தியாவின் அமைப்புகளையும் தேசிய வளர்ச்சியையும் எவ்வாறு குறைமதிப்பிற்கு உட்படுத்த முயல்கிறார்கள் என்பது குறித்து கவலை தெரிவித்தார். “நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் அவதூறு பரப்பும் ஒருவருக்கு பாராட்டு கிடைக்குமா? நமது புனிதமான அமைப்புகள் சிதைக்கப்படுகின்றன, இது நமது வளர்ச்சியைப் பாதிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற சன்சாத் டிவி@3 மாநாட்டின் தொடக்க விழாவில் கூடியிருந்தவர்களிடையே உரையாற்றிய திரு தன்கர், தேசிய விவாதத்தை வடிவமைப்பதில் ஊடகங்களின் முக்கிய பங்கை எடுத்துரைத்தார். இதழியலில் தனிநபரை மையமாகக் கொண்ட அணுகுமுறை-யிலிருந்து விலகி, நிறுவனங்கள் மற்றும் தேசிய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தனிநபரை மையமாகக் கொண்ட அணுகுமுறையை நாம் எவ்வாறு கொண்டிருக்க முடியும்? நமது புனித




அமைப்புகள் இழிவுபடுத்தப்படக் கூடாது” என்று அவர் கூறினார்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகங்களின் முக்கிய பங்கை வலியுறுத்திய திரு தன்கர், அதிகப்படியான விமர்சனங்களின் போக்கு அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் நேர்மறையான வளர்ச்சி அம்சங்களில் ஊடகங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக அரங்கில் நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய திரு தன்கர், “குறிப்பாக வெளியில் பாரதம் குறித்து தவறான சித்திரத்தை நாம் கொண்டிருக்க முடியாது. இந்த நாட்டை விட்டு வெளியே செல்லும் ஒவ்வொரு இந்தியரும், இந்த நாட்டின் தூதர்தான். தேசம், தேசியவாதத்திற்கான 100% அர்ப்பணிப்பைத் தவிர அவரது மனதில் வேறு எதுவும் இருக்க வேண்டியதில்லை என்று கூறினார்.

– B.நவின்குமார்

# 3 மாநிலங்களில் தடை: தமிழகத்திலும் கோனோகார்பஸ் மரங்களை தடை செய்ய சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தல்

குஜராத் உள்ளிட்ட 3 மாநிலங்களில் தடை செய்யப்பட்ட கோனோகார்பஸ் மரங்களுக்கு தமிழகத்திலும் தடை விதிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் பசுமை பரப்பை அதிகரிக்க, 'பசுமை தமிழ்நாடு இயக்கம்', 'ஈரநில இயக்கம்' உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களை அரசு தொடங்கியுள்ளது. அவற்றின் மூலமாக பல்வேறு மரக்கன்றுகளை நட்டு பசுமை பரப்பை அதிகரித்து வருகிறது அரசு. இந்நிலையில், 3 மாநிலங்களில் தடைவிதிக்கப்பட்ட, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கோனோகார்பஸ் தாவரங்களை வளர்க்க தமிழகத்திலும் தடை விதிக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சென்னை திருவான்மியூரைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் ஒ.உன்னிகிருஷ்ணன், சுற்றுச்சூழல் துறை செயலர் பி.செந்தில்குமாரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- தமிழகத்தில் ஊடுருவும் அன்னிய தாவர இனங்களை ஒழிப்பது தொடர்பாக தமிழக அரசு கடந்த 2021-ம் ஆண்டு கொள்கை ஒன்றை உருவாக்கியுள்ளது.

ஆப்பிரிக்காவை சேர்ந்த ஊடுருவும் அன்னிய தாவர இனமான கோனோகார்பஸ் சுற்றுச்சூழல் மற்றும் உடல்நல பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இந்த மரத்தை வனம் மற்றும் வனத்துக்கு வெளியே வளர்க்க குஜராத், ஆந்திரா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தாவரம் பூக்கும்போது, ஆஸ்துமா உள்ளிட்ட சுவாசக் கோளாறுகளை ஏற்படுத் துகிறது. இதன் வேர்கள் 50 மீட்டர் ஆழம் வரை சென்று, நகரப்புற உட்கட்டமைப்புகளான தொலைத்தொடர்பு சேவை கேபிள்கள், கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களை சேதப்படுத்துகின்றன. நிலத்தடி நீரை உறிஞ்சி, குடிநீர் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது.



இத்தகைய மரங்கள் சென்னையில் 192-வது வார்டு நீலங்கரை கடற்கரை பகுதியில் நடப்பட்டுள்ளன. தெருக்களில் வீடுகளுக்கு முன்பும் வளர்க்கப்படுகின்றன. இவை சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இத்தாவரங்களுக்கு தமிழகத்தில் தடை விதிக்க வேண்டும். இவ்வாறு அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வனத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "இந்த தாவரங்கள் பூக்கும் காலத்தில் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத் துவதாக சில ஆய்வுகள் கூறுகின்றன. புகார் மனு பெறப்பட்ட நிலையில், நீலங்கரை பகுதியில் நேரில் ஆய்வு செய்தோம். அங்கு 17 பெரிய கோனோகார்பஸ் மரங்கள் மற்றும் சிறிய செடிகள் இருந்தன. அவற்றை அகற்ற மாவட்ட பசுமைக் குழுவிடம் அனுமதி பெற இருக்கிறோம். அனுமதி கிடைத்த பின்னர், மாநகராட்சி மூலமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இத்தாவரத்துக்கு தமிழகம் முழுவதும் தடை விதிப்பது தொடர்பாக அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்" என்றனர்.

- K.ரமேஷ்குமார்

# புதிய தேசிய கல்வி கொள்கையை அமுல்படுத்துங்கள்!

## முதல்வர் ஸ்டாலினுக்கு மத்திய அமைச்சர் வலியுறுத்தல்!



அரசியல் ஆதாயத்தை தவிர்த்துவிட்டு மாணவர்களின் நலனை முன்னிறுத்தி புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார்.

மாநில கல்வித்துறைக்கு மத்திய அரசு உரிய நிதி வழங்காதது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் சமூக வளைதள பக்கத்தில் கண்டன பதிவிட்டிருந்தார். அதில், ''தேசிய கல்விக் கொள்கைக்கு தலைவணங்க மறுத்ததற்காக சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு கல்விக்கான நிதியை பாஜக மறுக்கிறது என்று குற்றம் சாட்டியிருந்தார்.

அதே நேரத்தில் கல்வியில் குறிப்பிட்ட இலக்கை அடையாதவர்களுக்கு தாராளமாக நிதியை அளிக்கிறது என்றும் தரமான கல்வி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்த மத்திய பாஜக அரசின் திட்டம் இதுதானா? என்றும் முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், ஜனநாயகத்தில் மாநிலங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி எப்போதும் வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார். தேசிய கல்விக்கொள்கைக்கு உங்கள் கொள்கை ரீதியான எதிர்ப்பில் சில கேள்விகளை அமைச்சர் எழுப்பி உள்ளார்.

தமிழ் உள்ளிட்ட தாய்மொழியில் கல்வி கற்பதை எதிர்க்கிறீர்களா?, தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் தேர்வு நடத்துவதை எதிர்க்கிறீர்களா?, தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் பாடப்புத்தகங்கள் மற்றும் உள்ளடக்கம் உருவாக்கப்படுவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையின் முழுமையான, சமமான மற்றும் உள்ளடக்கிய கட்டமைப்பை நீங்கள் எதிர்க்கிறீர்களா? என்றும் அப்படி இல்லாவிட்டால், அரசியல் ஆதாயத்தை தவிர்த்துவிட்டு மாணவர்களின் நலனை முன்னிறுத்தி புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்றும் முதல்வர் ஸ்டாலினை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார்.

– பா.கார்த்திகேயன்

# அட்டப்பாடி வனத்தில் 395 கஞ்சா செடிகள் அழிப்பு!

பாலக்காடு: அட்டப்பாடி வனத்தில் கலால்துறை, வனத்துறையின் உதவியுடன் நடத்திய சோதனையில், 395 கஞ்சா செடிகளை கண்டுபிடித்து அழித்தனர்.

கேரளா மாநில கலால் துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், துணை கலால் ஆணையர் ராபர்ட்டின் அறிவுரையின்படி, இன்ஸ்பெக்டர் ஷவுகத்தலி தலைமையிலான கலால் படை, வனத்துறையின் உதவியுடன், பாலக்காடு மாவட்டம் அட்டப்பாடி வன பகுதியான ஏணிக்கல், கிண்ணக்கரை ஆகிய இடங்களில் சோதனை நடத்தினர்.

அப்போது அங்குள்ள பள்ளத்தாக்கில், கஞ்சா தோட்டம் இருப்பதை கண்டுபிடித்தனர். இதை யடுத்து தோட்டத்தில் உள்ள ஏழு முதல், 10 அடி வரை உயரத்தில் உள்ள, 395 கஞ்சா செடிகள்



முழுவதையும் அழித்தனர். இதன் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து, விசாரித்து வருவதாகவும், வனத்தில் சோதனை தொடரும் என்றும் கலால் துறையினர் தெரிவித்தனர். – A.தங்கராஜ்



# டாஸ்மாக் திறக்க வந்த குடிமகன்கள்!

கள்ளக்குறிச்சி அருகே உள்ள சிறுமங்கலம் கிராம மக்கள் மது வாங்க 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கணியாமூர், அடரி, சிறுபாக்கம், விருகாவூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளுக்குச் சென்று வருகின்றனர்.

இதனால் எதிர்பாராத விபத்துகளை சந்திக்க நேரிடுவதாகக் கூறி, சிறுமங்கலம் கிராமத்திலேயே டாஸ்மாக் கடை அமைக்க வேண்டும் என அப்பகுதியை சேர்ந்த மது குடிப்போர் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர்.

குறிப்பாக டாஸ்மாக் கடை அமைக்க வேண்டும் என கோஷங்களை எழுப்பியவாறு மனு அளிக்க வந்ததால் ஆட்சியர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கடந்த வாரம் டாஸ்மாக் வேண்டாம் என இதே கிராமப்பகுதியை சேர்ந்த ஒரு பிரிவு மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ள நிலையில், இப்போது டாஸ்மாக் வேண்டும் என சிலர் மனு கொடுத்துள்ளனர். – S.பிரகாசம்

# சூடுபிடிக்கும் தவெக மாநாட்டு பணிகள்! தேதியை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு!




தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு தேதியை அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறார் நடிகரும் அக்கட்சியின் தலைவருமான விஜய்.

அக்டோபர் 27ஆம் தேதி விக்ரவாண்டியில் மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்தும் உறுதி அளித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய், கட்சிக் கொடி மற்றும் கொடிப் பாடலையும் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து, தவெக மாநாடு விரைவில் நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலையில் செப்டம்பர் 23 ஆம் தேதி தவெக நடத்தப்படும் மாநாட்டுக்கு அனுமதி மற்றும் பாதுகாப்பு கோரி அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறைக்கு கடிதம் அளித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து, மாநாட்டுக்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அதற்குப் பதிலளிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், மாநாடு எப்போது என்பது குறித்து வெளி-யிடப்படாமலேயே இருந்தது. இந்நிலையில், விக்கிரவாண்டியில் அக்டோபர் 27ஆம் தேதி

(ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு நடைபெறும் என விஜய் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி அறிமுகப்படுத்திய நாள் முதல் நம் கழகத் தோழர்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தமிழக மக்களின் பேரன்புடனும் பேராதரவுடனும் நமது அரசியல் வெற்றிக்கான களம் விரிவடைந்து கொண்டே வருகிறது. கழகக் கொடியேற்று விழாவின் போது நமது முதல் மாநில மாநாட்டுத் தேதியை அறிவிப்பதாக கூறியிருந்தோம்.

நமது மக்களின் பெரும் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றும் வகையில் தமிழக அரசியல் களத்தில் புதிய நம்பிக்கையை விதைக்கக் கூடிய நமது கழகத்தின் கொள்கைத் தலைவர்கள், கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல் திட்டங்களைப் பிரகடனப்படுத்தும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு. வரும் அக்டோபர் 27ஆம் தேதி மாலை 4 மணிக்கு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் நடைபெறுகிறது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து, காவல் துறை விதித்த 32 நிபந்தனைகளுக்கான பதில் கடிதத்தை தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், கூடுதல் கண்காணிப்பாளர் திருமாலிடம் விழுப்புரம் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் இன்று வழங்கினார். அதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில மாநாடு அக்டோபர் 27 ஆம் தேதி நடைபெறும என்று தலைவர் விஜய் அறிவித்திருந்தார்.

மாநாடு தொடர்பாக காவல் துறை சார்பில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு பதில் அளிக்குமாறும், விளக்கம் அளிக்குமாறும் கூறியிருந்தனர். அவர்கள் எழுப்பியிருந்த கேள்விகளுக்கு விளக்கம் அளித்து கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. தவெக மாநாடு சிறப்பான மாநாடாகவும், வெற்றி மாநாடாகவும் நடைபெறும். இந்த மாநாட்டில் யார், யார் பங்கேற்கிறார்கள் என்பது குறித்த தகவலை தலைவர் விஜய் அறி-விப்பார். விக்கிரவாண்டியில் திட்டமிட்டபடி அக்டோபர் 27 ஆம் தேதி மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்கி நடைபெறும் என்றார்.

– வீ.அய்யனார்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

UPI Number:
8754582123

# புதிய அம்சங்களுடன் களமிறங்கியுள்ள

# Royal Enfield Classic 350



இந்திய மோட்டார் சந்தையில் மிகவும் பிரபலமாகவும், அனைவரையும் கவரும் வகைகளிலும் உள்ள பைக்குகளில் ஒன்று ராயல் என்பீல்டு கிளாசிக் 350 (Royal Enfield Classic 350). தற்போது அதன் அப்டேட் வெர்ஷனை இந்தியாவில் வெளியிட்டிருக்கிறது ராயல் என்ஃபீல்டு நிறுவனம். இந்த பைக்கில் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகள், வேரியண்ட் மற்றும் அதன் விலை ஆகியவை குறித்து இந்த பதிவில் அறிந்துகொள்ளலாம்.

வேரியண்ட் மற்றும் நிறங்கள்: ராயல் என்ஃபீல்டு நிறுவனம், இந்த அப்டேட் செய்யப்பட்ட புதிய ராயல் என்ஃபீல்டு கிளாசிக் 350 பைக்கை ஹெரிடேஜ், ஹெரிடேஜ் ப்ரீமியம், சிக்னல்ஸ், டார்க் மற்றும் க்ரோம் என ஐந்து வேரியண்ட்களில் வெளியிட்டிருக்கிறது.

- ஹெரிடேஜ் வேரியண்டானது மெட்ராஸ் ரெட் (Madras Red) மற்றும் ஜோத்பூர் ப்ளூ (Jodhpur Blue) ஆகிய இரண்டு நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஹெரிடேஜ் ப்ரீமியம் வேரியண்டானது மெடலியன் ப்ரான்ஸ் (Medallion Bronze) நிறத்தில் கொடுக்கப்படுகிறது.
- சிக்னல்ஸ் வேரியண்டானது கமாண்டோ சேண்டு (Commando Sand) நிறத்தில் கிடைக்கிறது.
- டார்க் வேரியன்டானது கன் கிரே (Gun Grey) மற்றும் ஸ்டெல்த் பிளாக் (Stealth Black) ஆகிய இரண்டு நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- க்ரோம் வேரியண்டானது எமரால்டு (Emerald) நிறத்தில் வெளியாகியுள்ளது.

மேலும், இவைகளை தவிர்த்து ரெட்டிச் கிரே (Redditch Grey), ரெட்டிச் ரெட் (Redditch Red), ஹல்சியன் பிளாக் (Halcyon Black) மற்றும் ஹல்சியன் கிரீன் (Halcyon Green) ஆகிய நான்கு நிறங்களிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப வசதிகள்:**

- LED முகப்பு விளக்கு
- கியர் பொசிஷன் இன்டிகேட்டர்
- சிங்கிள் சேனல் / டூயல் சேனல் ABS
- அட்ஜஸ்ட்டபில் பிரேக் மற்றும் கிளட்ச் லீவர்
- LED இன்டிகேட்டர்கள்
- ட்ரிப்பர் நேவிகேஷன்
- டைப் ‘C’ சார்ஜிங் USB போர்ட்






- முன்புறம் டெலஸ்கோப்பிக் போர்க்ஸ்
- பின்புறத்தில் ட்வின் ஷாக் அப்சாபர்
- 300mm முன்பக்க டிஸ்க் பிரேக்
- 270mm பின்பக்க டிஸ்க் பிரேக்

**என்ஜின்:**

புதிய கிளாசிக் 350 பைக்கினுடைய என்ஜினில் எந்த மாற்றமும் இல்லை. முந்தைய மாடலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அதே என்ஜின்தான் கொடுக்கப்பட்டுள்ளது.

**என்ஜின் வகை** – சிங்கிள் சிலிண்டர் ஏர் / ஆயில்-கூல்டு J சீரிஸ் என்ஜின்

- எஞ்சின் திறன் – 350cc
- பவர் – 20.2hp/6100rpm
- டார்க் – 27Nm/4000rpm
- கியர் – 5 ஸ்பீடு கியர்பாக்ஸ்
- கூலிங் சிஸ்டம் – ஏர் மற்றும் ஆயில்

**நிறங்கள் மற்றும் விலை:**

- எமரால்டு (Emerald) – ரூ.2,30,000 (எக்ஸ்-ஷோரூம்)




- ஸ்டெல்த் பிளாக் (Stealth Black) – ரூ.2,25,000 (எக்ஸ்-ஷோரூம்)
- கன் கிரே (Gun Grey) – ரூ.2,25,000 (எக்ஸ்-ஷோரூம்)
- கமாண்டோ சேண்டு (Commando Sand) – ரூ.2,16,000 (எக்ஸ்-ஷோரூம்)
- மெடலியன் ப்ரான்ஸ் (Medallion Bronze) – ரூ.2,04,000 (எக்ஸ்-ஷோரூம்)
- மெட்ராஸ் ரெட் (Madras Red) – ரூ.1,99,500 (எக்ஸ்-ஷோரூம்)




- ஜோத்பூர் ப்ளூ (Jodhpur Blue) – ரூ.1,99,500 (எக்ஸ்-ஷோரூம்)
- ரெட்டிச் கிரே (Redditch Grey) – ரூ.1,93,080 (எக்ஸ்-ஷோரூம்)
- ரெட்டிச் ரெட் (Redditch Red) – ரூ.1,93,080 (எக்ஸ்-ஷோரூம்)
- ஹல்சியன் பிளாக் (Halcyon Black) – ரூ.1,95,919 (எக்ஸ்-ஷோரூம்)
- ஹல்சியன் கிரீன் (Halcyon Green) – ரூ.1,95,919 (எக்ஸ்-ஷோரூம்)

கிளாசிக் 350 ஆனது 6100 ஆர்பிஎம்மில் 20.2 பிஎச்பி மற்றும் 4000 ஆர்பிஎம்மில் 27 என்எம் அவுட்புட் கொண்ட 349 சிசி ஜே சீரிஸ் ஏர்-ஆயில் கூல்டு சிங்கிள்-சிலிண்டர் எஞ்சினைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இது 5-ஸ்பீடு கியர்பாக்ஸுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் இருக்கை உயரம் 805 மிமீ, கிரவுண்ட் கிளியரன்ஸ் 170 மிமீ மற்றும் 13 லிட்டர் எரிபொருள் டேங்க் உள்ளது. கிளாசிக் 350 ஜாவா 350 மற்றும் ஹோண்டா சிபி350 ஆகியவற்றுக்கு எதிராக போட்டியிடும்.

– நா.வீ.சிவசங்கர்

உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த மரம், அகர் மரம். சந்தன மரத்தைவிட, இது பல மடங்கு கூடுதல் விலை மதிப்புக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. இந்த மரத்துக்குச் சர்வதேச அளவில் சந்தை வாய்ப்புகள் பிரகாசமாக இருந்து வருகின்றன. இந்த மரத்தைப் மூலப்பொருளாகப் பயன்படுத்தி, உயர் ரக வாசனைத் திரவியங்கள், அகர் பத்திகள், விலையுயர்ந்த சாம்பிராணி, சோப்புகள் மற்றும் சில மருந்து பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன. இவ்வளவு சிறப்புகள் கொண்ட அகர் மரத்தின் பூர்விகம் இந்தியாதான். குறிப்பாக, வடகிழக்கு மாநிலங்களில் உள்ள காடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

சர்வதேச அமைப்பான சிட்ஸ் (CITES-Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora), அழிந்துவரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வர்த்தகத்தை ஒழுங்கு படுத்தும் மற்றும் கண்காணிக்கும் பணியை செய்து வருகிறது. அழிந்து வரும் தாவரங்களின் சுரண்டலைத் தடுக்கவும், காடுகளில் அவற்றின் வாழ்வியலை உறுதி செய்யவும் பணியாற்றுகிறது. இந்த அமைப்பில் இந்தியாவும் உறுப்பினராக உள்ளது.

அகர் மரங்களைக் காக்க இந்தியாவின் முன்மொழிவு அடிப்படையில் 1995-ல் முதல் முறையாக CITES இன் பின்னிணைப்பு மிமி இல், அகர் மரங்கள் பட்டியலிடப்பட்டன. அதன்படி, `அக்விலேரியா மலாசென்சிஸ்' என்ற தாவரவியல் பெயர் கொண்ட அகர் மரங்கள், உடனடியாக அழிந்துபோகும் அபாயம் இல்லை என்றாலும், இந்த மரங்களின் வாழ்வியலை அச்சுறுத்தும் சுரண்டலைத் தவிர்க்க, இதன் வர்த்தகத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், சர்வதேச அமைப்பான CITES மாநாட்டில், குறிப்பிடத்தக்க வர்த்தக மதிப்பாய்வில் (Review Significant Trade) அகர் மரங்களை சேர்க்கும் முயற்சியை வெற்றிகரமாகத் தடுத்துள்ளது, இந்தியா. இதன் மூலம், அகர் மரங்களின் வர்த்தக ஏற்றுமதி எளிதாகும். இந்த நடவடிக்கையானது அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் உள்ள லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு பயனளிக்கும்.

# அகர் மரங்கள் ஏற்றுமதிக்கு இனி தடையில்லை



இந்தியாவில் அகர் மரங்கள் அதிக அளவில் விளைவிக்கப்பட்ட போதும், சிட்ஸ் அமைப்பின் பல்வேறு கட்டுப்பாடுகளால் அதன் ஏற்றுமதி பாதித்தன. வர்த்தகம் தொடர்பான கட்டுப்பாடுகள் மத்திய கிழக்கு மற்றும் பிற வெளிநாடுகளுக்கு அகர் மரங்கள் ஏற்றுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தின.

நவம்பர் 2021 முதல் இந்தியாவில் அகர் மர ஏற்றுமதிக்கு அனுமதி இருந்தாலும், பல கட்டுப்பாடுகள் இருந்ததால், சட்டபூர்வமாக அகர் மரங்களை வர்த்தகம் செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. இதனால் சட்டத்துக்குப் புறம்பாக சில இடங்களில் ஏற்றுமதியும் நடைபெற்று வந்தது.

தற்போது இந்திய தாவரவியல் ஆய்வு (BSI) மற்றும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) ஆகியவற்றின் தாவர இனங்கள் பற்றிய நிரூபிக்கப் படாத கண்டுபிடிப்புகளுக்கான அமைப்பின் (Non Determine Findings-NDF) ஆய்வின் அடிப்படையில், குறிப்பிடத்தக்க வர்த்தகத்தின் மதிப்பாய்வு பட்டியலிலிருந்து அகர் மரங்கள் நீக்கப்பட்டுள்ளன.

மேலும், 2024 முதல் 2027 வரை அகர் மர தூள், சிப்ஸ், எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதிக்கான ஒதுக்கீட்டையும் பரிந்துரைத்துள்ளது என்.டி.எஃப். இதன்படி ஆண்டுக்கு 1,51,080 கிலோ அகர் மரங்கள், ஆண்டுக்கு 7,050 கிலோ அகர் எண்ணெயை ஏற்றுமதி செய்ய முடியும்.

`வனப்பகுதிகள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் காடுகளில் உள்ள மரங்களை அறுவடை செய்வது, விதைகள் / நாற்றுகள் / மரக்கன்றுகள் மற்றும் பிற பணிகளை மேற்கொள்ளக் கூடாது" என்று என்.டி.எஃப் தெரிவித்துள்ளது.

அதேசமயம் வீடுகள், தோட்டங்கள், பட்டா நிலங்கள், குத்தகை நிலங்கள், தனியார் நிலங்கள், சமூக நிலங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான நிலங்களில் பயிரிடப்பட்டிருக்கும் அகர் மரங்களை அறுவடை செய்ய அனுமதித்துள்ளது என்.டி.எஃப்.



அகர் மரங்களைச் சாகுபடி செய்து வரும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிதாஸிடம் பேசியபோது, ``இந்த மரத்துக்குச் சர்வதேச அளவில் சந்தை வாய்ப்புகள் பிரகாசமா இருக்கு. இன்றைய சந்தை விலை நிலவரப்படி, 10 - 12 ஆண்டுகள் ஆன ஒரு அகர் மரம், அதோட தரத்தைப் பொறுத்துக் குறைந்தபட்சம் 35,000 ரூபாய்ல இருந்து, அதிகபட்சம் 1,00,000 ரூபாய் வரைக்கும் விலை போகுது. வடகிழக்கு மாநிலங்கள்ல இயற்கையாகவே அதிக எண்ணிக்கையில் அகர் மரங்கள் வளருது.

அந்தப் பகுதிகள்ல சுமார் 8 ஆண்டுகள் ஆன அகர் மரங்கள்ல காற்றின் மூலம் பூஞ்சைகள் ஊடுருவும். அதனால் அந்த மரங்களோட தண்டுப்பகுதியில ஆங்காங்கே வட்ட வடிவுல சிப்ஸ் மாதிரி ஒரு தன்மை உருவாகும். அதை `அகர்'னு சொல்வாங்க. அதுமாதிரி அகர் உருவான மரங்களை அறுவடை செஞ்சு, அதிக அகர் தன்மை கொண்ட வட்டவடிவப் பகுதிகளை மட்டும் தனியாக நறுக்கி எடுத்து, வாசனை திரவியங்கள், ஊதுபத்திகள்,, சாம்பிராணி, விலை உயர்ந்த குளியல் சோப்புகள், மருந்து பொருள்கள் தயார் செய்யப் பயன்படுத்துறாங்க. சமீபகாலமா, கர்நாடகா விவசாயிகள் அகர் மர சாகுபடியில அதிக ஆர்வம் காட்டுறாங்க. கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள்ல கடந்த சில வருஷங்களாகத்தான் அகர் மர வளர்ப்பு பத்தின பேச்சுகள் இருக்கு" என்றார்.

- இளைய தர்ஷினி

# திருப்பதி லட்டு விவகாரம்:

## திண்டுக்கல் நிறுவனத்தில் அதிகாரிகள் தீவிர சோதனை



திருப்பதி லட்டு பிரசாத தயாரிப்புக்காக நெய் அனுப்பிய திண்டுக்கல் ஏ.ஆர். டெய்ரி ஃபுட் என்ற பால் நிறுவனத்தில் 7 மணி நேரத்துக்கு மேலாக மத்திய உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

திருப்பதி லட்டு தயாரிக்க வழங்கப்பட்ட நெய்யில் மாட்டுக் கொழுப்பு, பன்றி கொழுப்பு கலந்திருப்பது ஆய்வக பரிசோதனையில் தெரிய வந்தது. திருப்பதி லட்டுக்கு நெய் வழங்கிய 5 நிறுவனங்களில் ஒரு நிறுவனமான திண்டுக்கல்லைச் சேர்ந்த ஏ.ஆர். டெய்ரி ஃபுட் என்ற பால் நிறுவனம், திருப்பதி தேவஸ்தானத்துக்கு கடந்த 5 ஆண்டுகளாக நெய் அனுப்பி வந்துள்ளது. நெய்யில் விலங்கு கொழுப்பு கலந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனத்தின் ஆய்வறிக்கையையும் தேவஸ்தான நிர்வாகம் வெளியிட்டது. அதில் ஏ.ஆர்.டெய்ரி ஃபுட் நிறுவனம் மூலம் திருப்பதிக்கு அனுப்பிய நெய்யில் 20 சதவீதம் மட்டுமே தரம் இருக்கிறது. அதில் சோயா பீன்ஸில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணெய், மீன் எண்ணெய், மாட்டுக் கொழுப்பு உள்ளிட்ட பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருப்பதிக்கு நெய் அனுப்பிய ஏ.ஆர்.டெய்ரி ஃபுட் நிறுவனம், “எங்கள் தயாரிப்பில் எந்த குறைபாடும் இல்லை. எந்தப் பரிசோதனைக்கும் நாங்கள் தயார்” என்று அறிவித்தது. இதற்கிடையே, திண்டுக்கல் மாவட்ட மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் செப்.20 அந்த நிறுவனத்தில் சோதனை நடத்தினர். தொடர்ந்து அந்த நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை மாதிரி எடுத்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து, சென்னையில் இருந்து மத்திய உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி ரவி தலைமையிலான அதிகாரிகள் செப்.21 அன்று காலை 9.30 மணிக்கு அந்த நிறுவனத்துக்கு வந்தனர். பின்னர், அந்த நிறுவனத்தில் உள்ள நெய் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் இடங்களை பார்வையிட்டு சோதனை நடத்தினர். குறிப்பாக பாலில் இருந்து எவ்வாறு நெய் பிரித்து எடுக்கப்படுகிறது. அதனுடன் வேறு பொருட்கள் எதுவும் கலக்கப்படுகிறதா என்று நிறுவன அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். மேலும், அங்கு தயாரிக்கப்பட்ட நெய் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகளையும் சேகரித்தனர். பால் உள்ளிட்ட பொருட்களின் மாதிரிகளை பகுப்பாய்வுக்காக எடுத்தனர். ஏழு மணி நேரத்துக்கும் மேலாக சோதனை நடைபெற்றது.

பின்னணி விவரம்: ஆந்திராவில் கடந்த ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சி காலத்தில் நியமனம் செய்யப்பட்ட தேவஸ்தான அறங்காவலர் குழு, மிக குறைந்த விலைக்கு, அதாவது ஒரு கிலோ

நெய் ரூ.320 முதல் ரூ.411 என்ற விலையில் 5 நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்துள்ளது. இதில் ஒரு நிறுவனமான திண்டுக்கல்லை சேர்ந்த ஏ.ஆர்.டெய்ரி ஃபுட் நிறுவனம் திருப்பதி தேவஸ்தானத்துக்கு கடந்த 5 ஆண்டுகளாக நெய் அனுப்பி வந்துள்ளது. இதனால், லட்டு தரம் மிகவும் குறைந்து போனது. இது குறித்து பக்தர்கள் தொடர்ந்து புகார் கூறிவந்தாலும், கடந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக, ஆந்திராவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, சந்திரபாபு நாயுடு முதல்வர் ஆனார். இதைத் தொடர்ந்து, திருப்பதி லட்டு பிரசாதத்தின் தரம் குறித்த புகாரை அவரது பார்வைக்கு தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமள் ராவ் கொண்டு சென்றுள்ளார். இதுகுறித்து பரிசோதனை செய்யுமாறு சந்திரபாபு நாயுடு உத்தரவிட்ட நிலையில், குஜராத்தில் உள்ள என்டிடிபி பரிசோதனை மையத்துக்கு கடந்த ஜூலை மாதத்தில் நெய் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த ஆய்வு முடிவில், நெய்யில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இந்த நெய்யில் மீன் எண்ணெய், மாடு மற்றும் பன்றியின் கொழுப்பு ஆகியவை கலந்துள்ளதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின், லட்டு பிரசாதம் தயாரிக்கும் நெய்யில் ஜெகன் ஆட்சியில் நடந்த முறைகேடுகள் குறித்து முழு விளக்க அறிக்கையை உடனடியாக வழங்க வேண்டும் என்று திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டார். ஏழுமலையான் கோயிலின் புனிதத்தை காக்கும் விஷயத்தில், ஆகம, வைதிக, தார்மீக அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறியது குறிப்பிடத்தக்கது.



– அன்புமணி

PROPSERV
Property Related Allied & Legal services

★ REGISTRATION
★ PATTA
★ GIRAMA NATHAM
★ CMDA APPROVAL
★ BUILDING PLAN
★ NAME TRANSFER
★ SETTLEMENT
★ LEGAL HEIR CERTIFICATE
★ CORPORATION TAXES
★ LAND CEILING
★ SLUM BOARD
★ HOUSING BOARD
★ PROPERTY IDENTIFICATION
★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

# விநாயகர் சதுர்த்தி வரலாறு!

பரமசிவன் கணேசனை கணங்களின் தலைவனாக 'கணபதி'யாக நியமித்தார். அவருக்கு அனிமா, மகிமா முதலிய அஷ்டசித்திகளையும் மனைவிகளாக பிரம்மதேவன் அளித்து கணபதியைப் பலவாறு துதி செய்தார். கணபதியும் மகிழ்ந்து 'பிரம்மனே, வேண்டிய வரம் கேள்' என்று கூற பிரம்மன் 'என் படைப்பெல்லாம் தங்கள் அருளால் இடையூரின்றி நிறைவேற வேண்டும்' என்று வரம் கேட்க விநாயகரும் பிரம்மனுக்கு வரமளித்தார்.

**சந்திரன் சாபம்**

பூஜையில் பிரம்மன் அளித்த மோதகங்களை (கொழுக்கட்டை) கையில் எடுத்துக் கொண்டு, உயரக் கிளம்பி உலகெல்லாம் சுற்றி, சந்திரலோகம் சென்றார். அங்கு பெருத்த தொந்தியும், ஒடிந்த தந்தமும், நீண்ட தும்பிக்கையும், கையில் கொழுக்கட்டையும் தாங்கி வருகின்ற விநாயகனைக் கண்டு சந்திரன் வாய் விட்டுச் சிரித்துப் பரிகசித்தான். அதைப் பார்த்த விநாயகர் கோபம் கொண்டு, 'ஏ! சந்திரனே நீ தான் அழகன் என்று கர்வம் கொண்டிருக்கிறாய். இன்று முதல் உன்னை யாரும் பார்க்கக் கூடாது. அப்படி யாராவது உன்னைப் பார்த்தால் அவர்களுக்கு வீண் அபவாதம் ஏற்படுவதாகுக' என்று சபித்தார். சந்திரனும் ஒலி மழுங்கித் தண்ணீருக்குள் ஆம்பல் மலரில் மறைந்தான்.

**சாபம் நீங்கிய விதம்**

சந்திரன் அழிந்ததைக் கண்டு வருந்திய தேவர்களும் முனிவர்களும் இந்திரன் தலைமையில் பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர். பிரம்மனோ, தானோ, ருத்திரனோ, விஷ்ணுவோ இதற்கு ஒன்றும் செய்ய முடியாதென்றும், கணபதியையே சரணடைவதுதான் ஒரே வழியென்றும் கூறினார். எந்த முறையில் வழிபட்டால் சந்திரனின் சாபம் நீங்கும் என்று தேவர்கள் கேட்க 'ஒவ்வொரு கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியன்றும் (பௌர்ணமிக்குப் பின் வருவது) விரதம் ஏற்று, பலவகையான பழங்கள், அப்பம், மோதகம் இவைகளுடன் சித்ரான்னங்கள் முதலியவற்றை கணபதிக்கு அளித்தால் எண்ணிய வரங்களை அளிப்பார்' என்று பிரம்மன் கூறினார்.

பிறகு தேவர்கள் பிருகஸ்பதி(குரு)யைச் சந்திரனிடம் அனுப்பி விவரம் தெரிவித்தனர். சந்திரனும் இந்த முறையில் பூஜை செய்ய, கணபதியும் மகிழ்ந்து பாலகணபதியாக, விளையாட்டு விநாயகனாக அங்கே காட்சியளித்தார். சந்திரனின் மனம் களிப்புற்று, அவரைப் பணிந்து,

**"தவம் காரணம் காரண காரணாநாம்**
**க்ஷமஸ்வ மே கர்வ க்ருதம் ச ஹாஸ்யம்"**

என்று தன் செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டான்.



பிரம்மாதி தேவர்களும் சந்திரனுக்கு கணபதியிட்ட சாபத்தை நீக்கியருள வேண்டினர். கணபதியும் அவ்வாறே சாபவிமோசனம் அளித்தார். 'ஒவ்வொரு கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி'யிலும் மோதகம், அப்பம் முதலியவைகளுடன் என்னைப் பூஜித்த பின், ரோகிணியுடன் கூடிய சந்திரனான உன்னைப் பூசிப்பவர்களுக்கு கஷ்ட நிவாரணம் செய்கிறேன்' என்று விநாயகரே கூறினார். இதுதான் சங்கடஹர சதுர்த்தி எனப்படுகிறது.

பொதுவாக சதுர்த்தி தினங்களில் சந்திரனைக் கண்டால் ஓர் ஆண்டு வரை தொடர்ந்து வீண் அபவாதங்கள் வந்து சேரும் என்பது சிலரின் நம்பிக்கை.

**விநாயக சதுர்த்தி**

ஆண்டு தோறும் 'ஆவணி மாத சுக்ல சதுர்த்தியன்று மண்ணாலான என் உருவத்தை பொன்னால் செய்த பாவனையுடன் அமைத்து பல பூக்களால் பூஜித்த பின் இரவில் கண் விழித்து முறையாகப் பூஜித்தால், அவ்வாறு செய்பவனுக்கு அவன் தொடங்கிய காரியத்தில் வெற்றியையும், ஸகல காரியங்களில் சித்தியையும் அளிக்கிறேன்' என்று விநாயகரே சந்திரனுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

சியமந்தக மணி என்ற ரத்தினத்தின் காரணமாகப் பல அபவாதங்களுக்கு ஆளான கிருஷ்ணனுக்கு நாரதர் இக்கதையைக் கூறி, கிருஷ்ணனே சங்கடஹரண சதுர்த்தி பூஜை செய்து அவப்பெயர் நீங்கப் பெற்றார் என்று அறிகிறோம்.

இந்து மக்கள் அனுட்டிக்கின்ற விரதங்களில்

விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயக சதுர்த்தி அனுட்டிக்கப்படுகின்றது. அன்றைய தினம் உலகெங்கனுமுள்ள இந்துக்கள் பய பக்தியோடு விநாயக வழி பாடியற்றி, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். நாட்டுக்கு நாடு அந்தக் கொண்டாட்டங்கள் வேறுபட்ட முறைகளில் கொண்டாடப்படுவதைக் காணலாம்.

**பிள்ளையாரின் அவதாரம்**

ஆவணி மாதம் சுக்ல பட்ச சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் எழுந்தி மூஷிக வாகனனை முழு மனதோடு நினைத்து நீராட வேண்டும். பூஜை அறையில் சுத்தமான மனப்பலகை வைத்து அதன் மீது கோலம் போட வேண்டும். அதன் மேல் தலைவாழை இலை ஒன்றை வடக்கு பார்த்து வைத்து அதன் மேலே பச்சரிசியை பரப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர் பூஜை ஆரம்பிக்க வேண்டும்.

பிள்ளையார், விக்னேசுவரர், கணேசர், கணபதி, கணாதிபர், ஐங்கரன், ஏரம்பன், இலம்போதரர், குகாக்கிரசர், கந்தபூர்வசர், மூத்தோன், ஒற்றைமருப்பினன், மூஷிகவாகனன், வேழமுகன், கயமுகன், ஓங்காரன், பிரணவன் போன்ற இன்னும் பல நாமங்கள் விநாயகருக்கு வழக்கிலுள்ளன. இவற்றுள் 'விநாயகர்' என்பது 'மேலான தலைவர்' என அர்த்தப்படும் விமேலான: நாயகர் தலைவர் தனக்கு மேலாக ஒருவர் இல்லாதவர் எனப் பொருள்படும் அதுபோலவே 'விக்னேஸ்வரர்' என்றால் 'இடையூறுகளை நீக்குபவர்' என்றும், 'ஐங்கரன்' என்றால் (தும்பிக்கையுடன் சேர்த்து) ஐந்து கரங்களை உடையவரெனவும்' அர்த்தப்படும் 'கணபதி' என்பது கணங்களுக்கு அதிபதி என்று பொருள்படும். இவ்வாறே அவரது சகல நாமங்களுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் அந்தந்தப் பெயர்களிலேயே பொதிந்துள்ளன.

**விநாயக விரதங்கள்**

ஒவ்வோர் ஆண்டிலும் விநாயகருக்கான விரத நாட்கள் அனேகமாக சதுர்த்தித் திதியன்றே கூடுவதை அவதானிக்கலாம் சுக்கில பட்ச சதுர்த்தி என்றும் கிருஷ்ண பட்ச சதுர்த்தி என்றும் இரண்டு சதுர்த்தி விரத தினங்கள் மதாந்தம் சம்பவிக்கின்றன சுக்கில பட்சச் சதுர்த்தியை 'சதுர்த்தி விரதம்' என்று கொள்வர். அவற்றுள்ளும் ஆடி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தியை 'நாக சதுர்த்தி' என்றும் ஆவணி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தியை 'விநாயக சதுர்த்தி' என்றும் கைக்கொள்கின்றனர்.

இதே போல மாதாந்தம் கிருஷ்ண பட்ஷத்தில் வருகின்ற சதுர்த்தியை 'சங்கடஹர சதுர்த்தி' என்பர். விநாயகரைத் துதிப்போரின் சங்கடங்களை அவர் நீக்கியருளுவார் என்பதனால் அத்தினத்தில் வருகின்ற விரதத்தை 'சங்கடஹர சதுர்த்தி விரதம்' என்கின்றனர். இருந்தும் ஆவணி மாதத்தில் வருகின்ற கிருஷ்ண பட்ஷச் சதுர்த்தியை 'சங்கடஹர விநாயக சதுர்த்தி' என்று வழங்குவர்.

ஆவணி மாதத்தில் வருகின்ற இரண்டு சதுர்த்தி விரதங்களும் முக்கியமானவை. எனினும் விநாயக சதுர்த்தி விரதமே அதிவிஷேமானது. சுக்கில பட்ஷ சதுர்த்தியின் அதிபதியான 'தேவி' விநாயகரை வழிபட்டு மத்தியான நேரத்தில் தரிசனம் பெற்று உய்ந்தாள் என்றும், அந்நாளில், அந்நேரத்தில் விநாயரைக் குறித்து விரதம் அனுஷ்டித்து வழிபடுபவர்களுக்கு விநாயகரின் அருளும், சுகபோக சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெறுவது நிச்சயம் என்றும் கூறுவர்.

வரசித்தி விநாயகர், இஷ்டசித்தி விநாயகர், விக்ன நிவாரண கணபதி, வல்லப விநாயகர், சித்திபுத்தி விநாயகர் என்றெல்லாம் பல பெயர்கள் விளங்கினாலும் விநாயகரின் தத்துவம் ஒன்றே ஈசன் மகனான கணபதியைத் துதித்த பின்பே எந்தச் செயலையும் தொடங்குகிறோம். கேட்ட வரம் தரும் பிள்ளைக் குணம் கொண்டு, என்றும் எவர்க்கும் பிள்ளையாகத் திகழ்வதால் பிள்ளையாராகினார் அந்த கணேசன்.


மேலும் வீடுதோறும் களி மண்ணால் செய்த பிள்ளையார் சிலைகளை வண்ணக் குடையுடன் வாங்கி வந்து, எருக்கம் பூ அணிவித்து, அருகம்புல், செவ்வந்தி, மல்லிகை, அரளி போன்ற மலர்களால் அர்ச்சனை செய்வது வழக்கம் ஐங்கரனுக்கு விருப்ப மான கொழுக்கட்டை, அப்பம், சுண்டல், வடை, அவல், பொரி என நிவேதனங்கள் செய்கிறோம். வாழை, திராட்சை, நாவல், விளாம்பழம், கரும்புத் துண்டுகள், ஆப்பிள் என மிகவும் பிரியமுடன் தும்பிக்கையானுக்கு அளிக்கிறோம் அறிவு தெளிந்த ஞானம் முதலிவற்றை அளித்து எடுத்த செயல்கள் தடைவரா வண்ணம் காத்தருள வேண்டுகிறோம்.


**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம் செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்கு**
**சங்கத் தமிழ் மூன்றும் தா!**

என்று ஔவையார் பாடியது போல் இறைவனை வாழ்வில் நலம் பெற வேண்டி நிற்கின்றோம். மறுநாள் புனர் பூஜை என்று சொல்லப்படும், சிறு பூஜை செய்து, நல்ல நேரம் பார்த்து, பிள்ளையார் சிலைகளை எடுத்துச் சென்று கிணற்றிலோ, குளத்திலோ, ஆற்றிலோ விட்டு விடுவது வழக்கம்.

இவ்வாறு ஆண்டுதோறும் நாடெங்கும், உலகெங்கும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. – ராதிகா.S

# இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையை விரிவுபடுத்துகிறது நிதிச் சேவைகள் துறை




நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள நிதிச் சேவைகள் துறை (DFS), நாட்டில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

யுனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (யுபிஐ) போன்ற விரைவான கட்டண முறையை ஏற்றுக்கொள்வதை விரைவுபடுத் துவதற்கான முயற்சிகள் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இது கோடிக்கணக்கானவர்களுக்கு உடனடியான, பாதுகாப்பான மற்றும் தடையற்ற பணப்பரிவர்த்த னைகளை செயல்படுத்துகிறது.

ரொக்கப் பணமில்லா, அனைவரையும் உள்ளடக் கிய பொருளாதாரம் என்ற அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இந்த முயற்சி அமைந்துள்ளது.


முந்தைய நிதியாண்டுகளுடன் ஒப்பிடுகையில், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை 2023-24-ம் நிதியாண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.


**டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வளர்ச்சி:**

இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன, டிஜிட்டல் கட்டண பரிவர்த்தனைகளின் மொத்த எண்ணிக்கை 2017-18 நிதியாண்டில் 2,071 கோடி-யிலிருந்து 2023-24 நிதியாண்டில் 18,737 கோடியாக 44% வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) அதிகரித்துள்ளது. மேலும், நடப்பு 2024-25 நிதியாண்டின் 5 மாதங்களில் (ஏப்ரல்-ஆகஸ்ட்) பரிவர்த்தனை அளவு 8,659 கோடியை எட்டியுள்ளது.

பரிவர்த்தனைகளின் மதிப்பு ரூ.1,962 லட்சம் கோடியிலிருந்து 11% வளர்ச்சியுடன் ரூ.3,659 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. கூடுதலாக, நடப்பு 2024-25 நிதியாண்டின் கடந்த 5 மாதங்களில் (ஏப்ரல்-ஆகஸ்ட்), மொத்த பரிவர்த்தனை மதிப்பு ரூ.1,669 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.


இந்தியாவின் டிஜிட்டல் பரிவர்த்தனைச் சூழல் அமைப்பின் முக்கிய அம்சமாக யுபிஐ உள்ளது.




பங்கேற்கும் வங்கிகள், நிதி தொழில்நுட்பத் தளங்களின் வளர்ந்து வரும் கட்டமைப்பு ஆகியவற்றால் மிகவும் விருப்பமான முறையாக யுபிஐ மாற்றியுள்ளது.

இந்தியாவின் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை புரட்சி அதன் எல்லைகளைத் தாண்டி விரிவடைந்து வருகிறது. யுபிஐ, ரூபே இரண்டும் உலகளவில் வேகமாக விரிவடைந்து வருகின்றன. இது வெளிநாடுகளில் வசிக்கும் மற்றும் பயணம் செய்யும் இந்தியர்களுக்கு தடையற்ற பரிவர்த்தனைகளை செயல்படுத்துகிறது. தற்போது, யுபிஐ ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், பூட்டான், நேபாளம், இலங்கை, பிரான்ஸ், மொரீஷியஸ் போன்ற முக்கிய சந்தைகள் உட்பட 7 நாடுகளில் இது உள்ளது. இது இந்திய நுகர்வோர் மற்றும் வணிகங்களை சர்வதேச அளவில் பணம் செலுத்தவும் பெறவும் அனுமதிக்கிறது. இந்த விரிவாக்கம் பணம் அனுப்புவதை மேலும் ஊக்குவிக்கும், நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துடன் உலகளாவிய நிதி நிலப்பரப்பில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தும்.




டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் உலகளாவிய தலைவராக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. யுபிஐ-யின் உலகளாவிய விரிவாக்கம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் தொடர்ச்சியான எழுச்சியுடன், நிதி உள்ளடக்கம் மற்றும் சாமானிய குடிமகனின் பொருளாதார அதிகாரமளித்தல் ஆகியவற்றில் இந்தியா புதிய வரையறைகளை அமைத்து வருகிறது.

– S.ஜெயராஜ்

# பள்ளிகளில் ஆன்மிக சொற்பொழிவு: மகாவிஷ்ணு கைது!

## எனது பேச்சில் உள்நோக்கம் இல்லை: மகாவிஷ்ணு!



சென்னை அசோக் நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பேசுவதற்காக ‘பரம்பொருள்’ அறக்கட்டளையை நடத்தி வரும் மகாவிஷ்ணு என்பவர் அழைக்கப்பட்டார். அவர் தனது பேச்சில், பாவ புண்ணியம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக கூறப்படுகிறது.

பின்னர், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆண்கள் மாதிரி பள்ளியில் பேச அழைக்கப்பட்டார். அங்கு மகாவிஷ்ணுவின் பேச்சுக்கு பார்வை மாற்றுத் திறனாளியும் தமிழாசிரியருமான சங்கர் எதிர்ப்பு தெரிவித்தார். அவருடன் மேடையிலேயே மகாவிஷ்ணு வாக்குவாதம் செய்த காட்சிகள் இணையத்தில் வெளியாயின.

சமூக வலைதளங்களில் இந்த காட்சிகள் வெளியாகி சலசலப்பை ஏற்படுத்திய நிலையில், இரண்டு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டனர். மகாவிஷ்ணுவின் பேச்சைக் கண்டித்து மாற்றுத் திறனாளிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தொடர்ந்து, சைதாப்பேட்டை காவல்நிலையம் மற்றும் அசோக் நகர் காவல்நிலையத்தில் அவர் மீது புகார்கள் அளிக்கப்பட்டன.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் வில்சன் அளித்த புகார் மனுவில், ‘மகாவிஷ்ணு மீது மாற்றுத்திறனாளிகள் வன்கொடுமை சட்டம் மற்றும் ஊனமுற்றோர் உரிமைகள் சட்டப்பிரிவு 72(அ) படி நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும்‘ எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, திருப்பூர் குளத்துப் பாளையத்தில் செயல்படும் மகாவிஷ்ணுவின் பரம்பொருள் அறக்கட்டளையில் போலீசார் விசாரணை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக, ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பிய மகாவிஷ்ணுவை சென்னை விமான நிலையத்தில் காவல்துறையினர் கைது செய்தனர். மகாவிஷ்ணு மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

சென்னை சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் அனிதா ஆனந்த் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட அவரை, செப்டம்பர் 20-ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

**யார் இந்த மகாவிஷ்ணு?**

மகாவிஷ்ணு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மாணவராக இருந்த நாட்களிலேயே மேடைப் பேச்சில் ஆர்வமுடையவராக இருந்த மகாவிஷ்ணு, தனியார் தொலைக்காட்சி நடத்திய ‘அசத்தப் போவது யாரு?’ நிகழ்ச்சியில் கலந்து கொண்டதன் மூலம் பரவலான அறிமுகத்தைப் பெற்றார்.

“இந்த (அசத்தப் போவது யாரு?) நிகழ்ச்சியில் கிடைத்த பெயரும் புகழும் அவருக்கு நடிப்பின் மீது ஆர்வத்தைத் தூண்டியது. பிறகு படங்களை இயக்க விரும்பி, கதைகளை எழுதினார். அதற்குப் பிறகு ‘துருவங்கள் பதினாறு’ படத்தை கேரளாவில் விநியோகம் செய்தார். “இதற்குப் பிறகு படம் ஒன்றை இயக்கவும் முடிவு செய்தார்.

“ஆனால், அந்த முயற்சியில் வெற்றி ஏதும் கிடைக்காத நிலையில், தனது குருவான காஞ்சி விஸ்வநாத சுவாமிகள் அருளால் ஆன்மீகப் பாதையை அவர் கண்டடைந்ததாக,” அவரது ‘பரம்பொருள் ஃபவுண்டேஷனின்’ இணையதளம் குறிப்பிடுகிறது.

இதற்குப் பிறகு தன்னை ஆன்மீகவாதியாக முன்னிறுத்திக் கொண்ட மகாவிஷ்ணு, திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் ‘பரம்பொருள் ஃபவுண்டேஷன்’ என்ற அமைப்பை நடத்தி வருகிறார். இந்த அமைப்பின் சார்பில் யோகா நிகழ்ச்சிகள், உரைகள் ஆகியவற்றை நிகழ்த்தி வருகிறார் மகாவிஷ்ணு.

தமிழக அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் மத்தியில் பேச யாரை அழைக்கலாம் என்பது குறித்து விதிமுறைகள் ஏதும் உள்ளனவா?

“அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரை முதன்மைக் கல்வி அதிகாரியின் அனுமதியின்றி யாரையும் உள்ளே அனுமதிக்க முடியாது. யாரை அழைப்பதென்றாலும் முதன்மைக் கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும்.

“ஆனால், ஒரு நபர் மாணவர்கள் மத்தியில் பேச மிகத் தகுதியானவர் என பள்ளித் தலைமை ஆசிரியர் கருதினால், விதிவிலக்காக அவரே முடிவெடுக்கலாம். ஆனால், வரும் நபரின் பின்னணி குறித்து முழுமையாக ஆராய வேண்டியது அவரது கடமை. அந்த நிகழ்வுக்கு அவரே பொறுப்பு,” என்கிறார் தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளிகள் முதுநிலை பட்டதாரிகள் ஆசிரியர் கழகத்தின் கௌரவத் தலைவர் ஏ.ஆர். பாலகிருஷ்ணன்.

இந்நிலையில், மகாவிஷ்ணு மீது மாற்றுத்திறனாளிகள் நீதி இயக்க தலைவர் சரவணன் அளித்த புகாரில் போலீசார் மேலும் ஒரு வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மாணவ, மாணவிகளை நல்வழிப்படுத்தும் நோக்கில் மட்டுமே பேசினேன். ஆனால் எனது பேச்சு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று போலீசாரிடம் மகாவிஷ்ணு வாக்குமூலம் அளித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

**இந்து அமைப்புகள் குற்றச்சாட்டு**

பள்ளிக்கல்வித் துறையில் நடக்கும் தவறான விஷயங்களை திசைதிருப்பவே மகாவிஷ்ணு விவகாரம் பெரிதுபடுத்தப்படுவதாக கூறுகிறார், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வழக்கறிஞர் பிரிவான அகில பாரத வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் வழக்கறிஞர் ராமமூர்த்தி.

“கிருஷ்ணகிரியில் போலி என்.சி.சி பயிற்சி களை நடத்தி மாணவிகளுக்கு பாலியல் வன்கொடுமை நடந்தது. மற்ற பள்ளிகளிலும் இதுபோல போலி முகாம்கள் நடத்தப்பட்டதாக தகவல் வெளியானது. இதுபோன்று பள்ளிக்கல் வித்துறை மீது எழுந்த விமர்சனங்களை மறைப்பதற்காக நடத்தப்படும் யுக்தியாகவே இதைப் பார்க்கிறோம்“. என்கிறார் ராமமூர்த்தி.

தொடர்ந்து பேசிய அவர், “மகாவிஷ்ணு விவகாரத்தை வைத்துக் கொண்டு பள்ளிகளில் என்ன பேச வேண்டும், என்ன பேசக் கூடாது என்பதில்வழிகாட்டுதல்களைகொண்டுவருவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதற்கு முன்பு இவ்வாறு மகாவிஷ்ணு பேசியதாக எந்த தகவலும் இல்லை. சொல்லிக் கொடுக்கப்பட்டு பேசப்பட்டதா என்பதை ஆராய வேண்டும். இதை நாடகமாகவே பார்க்கிறோம்“ என்றார்.

“மதத்தையும் அரசையும் தள்ளி வைப்பது என்பது வேறு. இவர்கள் இந்து மதத்தை மட்டும் தள்ளி வைக்கின்றனர். கிறிஸ்துவ, இஸ்லாமிய பள்ளிகளில் நடக்கும் விஷயங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள்” என்று அவர் குற்றம்சாட்டுகிறார்.

போலீஸ் விசாரணையில் மகா விஷ்ணு கூறியதாக வெளியாகி உள்ள தகவல்: கடந்த காலங்களில் நான் இதுபோன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசி உள்ளேன். விழிப்புணர்வு ஏற்படுத்தவே பேசினேன். நல்வழிப்படுத்துவதே எனது நோக்கம். எனது பேச்சில் எந்த உள்நோக்கமும் கிடையாது. அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டு உள்ளது. என்னை சித்தர்கள் வழிநடத்துகின்றனர். இவ்வாறு அவர் கூறியுள்ளதாக தெரிகிறது.

– தமிழ் வீரன்



# தமிழகத்தில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்: அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்கு ஸ்டாலின் வேண்டுகோள்

தமிழக முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலின் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசு முறை பயணமாக அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். முதல்வர் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முன்பாகவே அமைச்சரவை மாற்றம் இருக்கும், உதயநிதிக்குத் துணை முதல்வர் பதவி வழங்கப்படும், கட்சியில் மாவட்டச் செயலாளர்கள் மாற்றம் இருக்கும் என்று பெருமளவில் பேசப்பட்டது. ஆனால், இதுவரை எந்த மாற்றமும் நடக்கவில்லை.

முதல்வர் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முன்பாக அமைச்சரவை கூட்டம் நடந்து முடிந்தது. அதேபோலவே, திமுகவின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டமும் நடந்து முடிந்திருந்தது. நான் வெளிநாட்டுக்குச் சென்றாலும், அங்கிருந்தே ஆட்சி பணிகளையும், கட்சி செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவோம். உங்கள் அனைவரிடமும் நடக்கும் பணிகள் கவனிப்பேன் என்று அழுத்தமாகச் சொல்லியிருந்தார். அதுபோலவே அவ்வப்போது கட்சியில் என்ன நடக்கிறது என்று மூத்த நிர்வாகிகளிடம் பேசி தெரிந்துகொண்டிருக்கிறார்.

கட்சி பணிகள் ஒருபுறமிருக்க அமெரிக்காவிலிருந்தபடியே அரசுப் பணிகளை மேற்கொள்கிறேன் என்று முதல்வர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் ஒரு புகைப்படத்தைப் பதிவு செய்திருந்தார். மேலும், கடந்த வாரத்தில் அறிவாலயத்தில் ஒருங்கிணைப்புக் குழு திமுக மூன்று சார்பு அணிகளுடன் ஆய்வுக்கூடம் நடத்தியிருந்தது. இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் காணொளி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

இந்த கூட்டத்தில், இம்மாதம் நடைபெறவுள்ள திமுகவின் முப்பெரும் விழா, பவளவிழா ஏற்பாடுகள் குறித்துப் பேசப்பட்டது. அடுத்ததாகக் கட்சி சார்பில் மாவட்டம் தோறும் நடைபெறும் பொது உறுப்பினர்கள் கூட்டம் குறித்து தகவல் கேட்டறிந்தார். அதேபோல, அமெரிக்காவில் முதலீடுகள் தொடர்பாகத் தகவலையும் ஒருங்கிணைப்பு குழுவினரிடம் தகவல் பகிர்ந்திருக்கிறார் முதல்வர். பவளவிழாவுக்கு முன்பாக கட்சி உறுப்பினர்கள் வீடுகள், கட்சி அலுவலகங்களில் கட்சிக் கொடியை ஏற்ற வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தியிருக்கிறார்.

ஒருங்கிணைப்புக் குழு சார்பாக அமைச்சர் உதயநிதி பேசும்போது, “கட்சியில் ஏற்படுத்த வேண்டிய மாற்றம் குறித்து ஒருங்கிணைப்புக் குழு பரிந்துரைகளைத் தயார் செய்து வருகிறது. முதல்வர் தமிழகம் திரும்பியதும் அந்த பரிந்துரைகளை முதல்வரிடத்தில் சமர்ப்பிக் கப்படும்“ என்று பேசியதாக திமுக வட்டாரங்கள் தகவல் சொல்கின்றன.

**அப்படி என்ன மாற்றம்?** “நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த நேரத்திலிருந்து கட்சியிலும், அமைச்சரவையிலும் மாற்றம் இருக்கும் என்றுதொடர்ந்து பேசப்பட்டுவந்தது. உதயநிதிக்குத் துணை முதல்வர் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. அந்த சமயத்தில் கட்சியில் சீனியர் ஒருவர் எனக்கும்

துணை முதல்வர் பொறுப்பு தரவேண்டும் என்று அடம்பிடித்ததினாலேயே தாமதம் ஏற்பட்டது. அதேசமயத்தில், அமைச்சரவையில் ஒருசிலரை வெளியேற்றிவிட்டு புதியவர்களுக்கு

வாய்ப்புகள் வழங்கவும் ஆலோசனை நடந்தது. அறிவாலயம் மற்றும் பென் கம்பெனி கொடுத்த லிஸ்டில் முதல்வருக்கு முழு உடன்பாடு இல்லாத காரணத்தினால் அந்த மாற்றமும் தள்ளிப்போனது.

செந்தில் பாலாஜி வெளியே வரட்டும் அமைச்சரவை மாற்றத்தைப் பார்த்துக்கொள் ளலாம் என்று முதல்வர் தரப்பும் மாற்றங்களைத் தள்ளிப்போட்டிருந்தது. ஆனால், தேர்தல் நெருங்கவுள்ள நிலையில் இனியும் காலதாமதப் படுத்த முடியாது. எனவே அமைச்சரவை மாற்றமும் சரி, மாவட்டச் செயலாளர்கள் மாற்றமும் சரி முதல்வர் தமிழகம் வந்ததும் முடிவு செய்யப்படும். முப்பெரும் விழா முடிந்ததுமே மாற்றங்கள் குறித்து அறிவிப்புகள் வெளியாகலாம்.

மாவட்டச் செயலாளர்களைப் பொறுத்தவரை தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ள மா.செ, நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றாத மா.செ என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. அந்த பட்டியலில் ஒருசிலர் தூக்கியடிக்கப்படுவார்கள். அதேபோல, நான்கு-ஐந்து மாவட்டங்கள் வைத்திருக்கும் மா.செ-களிடமிருந்து மாவட்டங்களைப் பிரிந்து புதிய மாவட்டம் உருவாக்கவேண்டும் என்ற பேச்சு இருந்தது. ஒருங்கிணைப்புக் குழுவும்அதற்கான பட்டியலைத் தயார் செய்து பரிந்துரை செய்யத் தயாராக இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டே இந்த மாற்றங்கள் அனைத்தும் நடக்கவுள்ளது".

– **நா.வீ.சிவசங்கர்**

---

# யூடியூப் பார்த்து அறுவை சிகிச்சை.. 15 வயது சிறுவன் பரிதாப பலி.. போலி மருத்துவர் கைது!

பீகாரில் மருத்துவர் ஒருவர் யூடியூபை பார்த்து அறுவை சிகிச்சை செய்ததால் 15 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம் சரண் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ண குமார் (15). இவர் கடந்த சில நாட்களாக கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். இதனால், சிறுவனின் பெற்றோர், சரண் நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு மருத்துவர் அஜித்குமார் முதலுதவி சிகிச்சை அளித்தார். அப்போது சிறுவனுக்கு பித்தப்பையில் கல் இருப்பதாகவும் அதனால் தான் வயிற்று வலி ஏற்பட்டதாகவும் கூறினார். பின்னர், பெற்றோரின் அனுமதியின்றி மருத்துவர் சிறுவனுக்கு அறுவை சிகிச்சை செய்ததாக கூறப்படுகிறது. சிறுவனின் பெற்றோர் யூடியூப் பார்த்து அறுவை சிகிச்சை செய்ததாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு சிறுவனின் உடல்நிலை மோசமடைந்ததாகத் தெரிகிறது.




பெற்றோர் சிறுவனை பாட்னாவில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் வழியிலேயே சிறுவன் உயிரிழந்தான். பெற்றோர் அளித்த புகாரின் பேரில் போலி மருத்துவர் அஜித்குமாரை கைது செய்ய போலீசார் விரைந்தனர். போலீசார் தொடர்ந்து அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்.

– K.அழகர்சாமி



# வசம்பு

## வாதம், மூட்டு வலி, முடி உதிர்தல், பொடுகு, பூச்சிக்கடி கொழுப்பு, போன்ற பிரச்சனைகளை குணமாக்கும் வசம்பு

வசம்பு என்பது ஒரு பிரபலமான இயற்கை மற்றும் மருத்துவ மூலிகையாகும். இந்த மூலிகையை பெரும்பாலும் பிறந்த குழந்தைகளுக்கு பயன்படுத்துவது உண்டு. தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் எந்த நோய் நொடியில்லாமல் இருப்பதற்காக இந்த வசம்பை கோர்த்து பிறந்த குழந்தைகளின் கைகளில் கட்டுவது உண்டு. இந்த வசம்பானது பிள்ளை மருந்து, பிள்ளை வளர்த்தி என்றும் அழைக்கப்படுகிறது. வசம்பு வேரானது நிறைய மருத்துவ குணங்கள் நிறைந்தது.

வசம்பு குழந்தைகளுக்கு ஏற்படும் நெஞ் செரிச்சல், சீரணமின்மை, வயிற்று வீக்கம், வயிற்று போக்கு இவற்றை போக்க வசம்பு பொடி உதவுகிறது. மேலும் குழந்தைகளின் அதிக பிரச்சினைகளை களையவும் உதவுகிறது.

வசம்பு பொடியை தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வருவது வயிற்று பிரச்சினைகள் சரியாக வாய்ப்பு உள்ளது. இப்படி செய்யும் போது 30 நிமிடங்கள் வரை குழந்தைகளுக்கு பால் கொடுக்க வேண்டாம். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைக்கு தான் தேன் கொடுக்க வேண்டும். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைக்கு தாய்ப்பாலில் கலந்து கொடுக்கலாம்.

வசம்பு மற்றும் அதிமதுரத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட கஷாயம் இருமல், வயிற்று வலி போன்ற குழந்தைகளின் நோய்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது குழந்தைகளுக்கு ஏற்படும் வயிறு பிரச்சினைகளை சரி செய்ய உதவுகிறது.

இந்த வசம்பை எரித்து அதன் சாம்பலை தேங்காய் எண்ணெயுடன் கலந்து அடிவயிற்றின் மேல் தடவி வந்தால் வாயுத்தொல்லை நீங்கும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்பு நோயை தடுக்க இந்த வசம்பு தண்டுகளை தாயத்து வடிவில் குழந்தையின் இடுப்பில் மற்றும் கைகளில் கட்டுவது உண்டு.

பாரம்பரியமாக பயன்படுத்தும் இந்த வசம்பு மருந்தானது குழந்தைகளின் சரியான மூளை வளர்ச்சி, பேச்சு திறன், சிறந்த பார்வை திறன், அதிகரித்த விந்து திறன் போன்றவற்றை தருகிறது.

### வசம்பை எப்படி பயன்படுத்துவது

இந்த வேர்ப்பட்டையின் பொடியை தினமும் 100 முதல் 700 மி.கி அளவில் சாப்பிட்டு வந்தால் நரம்பு மண்டலம் வலுப்பெற உதவும் மற்றும் நன்மை பயக்கும். ஒரு கிராமுக்கு மேல் கொடுத்தால் குழந்தைக்கு வாந்தி ஏற்பட வாய்ப்புள்ளது.

வசம்பு, காயம், அதிவிடயம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் தோள் இவைகளை பொடியாக்கி சம அளவு கலந்து சாப்பிட்டு வரலாம். இது அஜீரணம் மற்றும் அஜீரணத்தால் ஏற்படும்

வயிற்றுப்போக்கு, வாய்வு போன்றவற்றுக்கு 1 -2 கிராம் அளவு கொடுக்கப்படலாம்.

வசம்பானது குழந்தைகளுக்கு ஏற்படும் வாயு, வயிற்று, அசௌகரியம் மற்றும் குளிர்ச்சியை நீக்க உதவுகிறது. ஆனால் சிறு குழந்தைகளுக்கு கொடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். அதிகப்படியாக கொடுப்பது உங்களுக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். மேலும் சிறு குழந்தைகளுக்கு கொடுப்பதற்கு முன்பு மருத்துவரை அணுகி சரியான அளவு பரிந்துரைக்கப்படுகிறது.

### குழந்தைகளுக்கான கண்மை தயாரிக்க உதவுகிறது:

வசம்பை கருப்பு நிறமாக மாற்றும் வரை எரிக்க வேண்டும். பிறகு எரித்த வசம்பை தண்ணீரில் தேய்த்து கண்மை பேஸ்ட் மாதிரி தயாரிக்க வேண்டும். இந்த கண்மையை கொண்டு குழந்தையின் நெற்றி, கன்னங்கள் மற்றும் பாதங்களில் பொட்டு வைக்கலாம். இது தொற்று இல்லாமல் பாதுகாக்கும். திருஷ்டி போக்குவதாக நம்பப்படுகிறது.

### வசம்பு பூச்சிகளுக்காக பயன்படுகிறது

பல்வேறு விஷ பூச்சிகள் விஷ ஜந்துக்கள் வீட்டுக்குள் வராமல் இருக்கவும் வசம்பு உதவுகிறது. வசம்பு பொடியை படுக்கைக்கு அடியிலும் அலமாரிகளின் மூலைகளிலும் தூவி விட வேண்டும். வீட்டில் கைக்குழந்தைகள் இருந்தால் அதை ஒரு துணியில் இறுக்கமாக கட்டி குழந்தைக்கு அருகில் வைக்கலாம். இதனால் பூச்சிகள் குழந்தைகளை அண்டாமல் தடுக்கிறது.

### வசம்பு பொடி முகத்திற்கு

வசம்பு பொடி முகத்திற்கு அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் இது தோல் நோய்த்தொற்றுகள், ஒவ்வாமை மற்றும் சரும தடிப்புகளுக்கு பயன்படுகிறது. இந்த வசம்பு பொடியை மசாஜ் எண்ணெய்யுடன் கலந்து சரும பிரச்சனைகளுக்கு பயன்படுத்தி வரலாம். குழந்தைகளுக்கான குளியல் பொடியில் சிட்டிகை கலந்து குழந்தையின் சருமத்தில் தடவி வந்தால் சருமத்தொற்றுகள் வராமல் தடுக்கலாம்.

சம்பு மிக மிக நல்லது. பாதுகாப்பானது. ஆனால் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தினால் இது பக்கவிளைவுகளை உண்டு செய்யலாம்.

– D.பாமா




தேங்காயில் எண்ணற்ற சத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன.

### தேங்காயில் உள்ள சத்துக்கள்:

புரதச் சத்து, மாவுச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு உள்ளிட்ட தாதுப் பொருள்கள், வைட்டமின் சி, அனைத்து வகை பி காம்ப்ளக்ஸ் சத்துக்கள், நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துகளும் தேங்காயில் உள்ளன.

### தேங்காயின் நன்மைகள்:

தேங்காயின் அதிகபட்ச நன்மைகளை பெறுவதற்கு, நீங்கள் தேங்காய்யை பச்சையாக சாப்பிடுவதே நல்லது.

எலும்புகள் வலிமையாக இருப்பதற்கு கால்சியம் சத்து அவசியமாகும். அத்தோடு பாஸ்பரஸ் சத்தும் எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு தேவையானதாக இருக்கிறது. தேங்காய் அடிக்கடி சாப்பிட்டு வருபவர்களுக்கு உடலில் பாஸ்பரஸ் சத்து அதிகம் சேர்ந்து எலும்புருக்கி நோய் போன்றவவை ஏற்படாமல் தடுக்கிறது.

தேங்காய் சாப்பிடுவது உடலுக்கு அதிக எனர்ஜியைக் கொடுக்கிறது. அதோடு இதில் நோய் எதிர்க்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்யும். உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை இரண்டு மடங்காகக் அதிகரிக்கச் செய்கிறது. தேங்காய் சாப்பிடுவதால் பருவகால நோய் தொற்றுக்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வளரும் இளமைப்பருவத்தினர் மற்றும் நடுத்தர வயதுடையவர்கள் தினமும் ஒரு கோப்பை தேங்காய் சாப்பிடுவதால் இரும்பு சத்து கிடைக்கிறது..

எனவே தினமும் உணவில் தேங்காயை எடுத்துக் கொள்ளுங்கள்.

செப்டம்பர் 2, உலக தேங்காய் தினம் இன்று...

– கா.சுபுலட்சுமி

# வேட்டையன்




ரஜினி நடித்துள்ள ‘வேட்டையன்’ திரைப்படத்தின் கதைக் களம் குறித்து தெரியவந்துள்ளது. த.செ.ஞானவேல் இயக்கியுள்ள இந்தப் படம் வரும் அக்டோபர் 10-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதன் டிக்கெட் முன்பதிவு விரைவில் தொடங்க உள்ளது.

இப்படத்தின் டீசர் வெளியானதுடன், இசை வெளியீட்டு நிகழ்வும் ரசிகர்களின் எதிர்பார்ப்பைக் கூட்டியுள்ளது. இந்நிலையில், வெளிநாடு டிக்கெட் புக்கிங் செயலியில் ‘வேட்டையன்’ படத்தின் ‘சினாப்சிஸ்’ ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதன் விவரம்: “கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காவல் அதிகாரி ஒருவர் என்கவுன்டர் செய்துவிட, அது அவருக்கு பெரும் தலைவலியாக மாறிவிடுகிறது.

அதாவது, அந்த காவல் அதிகாரி தான் செய்த என்கவுன்டர் குறித்த விசாரணைக்கு





ஆளாக்கப்படுகிறார்.

ஒருபுறம் என்கவுன்டருக்கு சட்டப்படி காரணம் சொல்ல வேண்டும், மறுபுறம் ஊழல்வாதிகளை எதிர்த்து களமாட வேண்டும். இந்நிலையில், இதனை எதிர்த்து போராடி அவர் எப்படி மீண்டார் என்பதை சொல்கிறது படம்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ‘வேட்டையன்’ படத்தில் அமிதாப் பச்சன், ராணா, மஞ்சு வாரியர், துஷாரா விஜயன், ரித்திகா சிங் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார்.

– பா.அசோக்குமார்




## நிதி இழப்பு தொடர்பான சைபர் குற்றங்களில் பணத்தை மீட்கும் முறை!

சென்னை மாநகரில், ஜனவரி முதல் ஆகஸ்ட் 2024 வரை மொத்தம் 1679 வழக்குகள் சைபர் குற்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் 1589 வழக்குகள் நிதி இழப்பு தொடர்பான சைபர் குற்றங்கள் ஆகும். இவற்றில் பல்வேறு மோசடிகளில் சுமார் ரூ.189 கோடிகள் இழப்பு ஏற்பட்டுள்ளது. அவை ஆன்லைன் பங்கு வர்த்தக மோசடி, Digital Arrest-fod Ex/ கூரியர்/TRAI மோசடி ஸ்கைப் மோசடிகள், ஆன்லைன் பகுதி நேர வேலை மோசடி திருமண மோசடி, EB BILL மோசடி,பரிசு மோசடி போன்றவை அடங்கும்.

எந்தவொரு நிதி இழப்பு தொடர்பான சைபர் குற்றத்தில் பாதிக்கப்பட்டவராக இருந்தாலும், முதலில் தேசிய சைபர் குற்றங்களை புகாரளிக்கும் தளமான NCRP (National Cyber Crime Reporting Portal) மூலம் குற்றத்தை பதிவு செய்ய வேண்டும். இதற்கு சைபர் கிரைம் ஹெல்ப்லைன் எண் 1930 அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தை பயன்படுத்தலாம். NCRP இல் பதிவு செய்யப்பட்டு கிடைக்கும் பதிவு எண் வாயிலாக குற்றத்தில் ஈடுபட்ட சந்தேகத்திற்கிடமான வங்கி கணக்குகளை முடக்கம் செய்யும் செயல்முறையை தொடங்குகிறது. எனவே, ஒரு சைபர் குற்றத்தில் பாதிக்கப்பட்டவர் NCRP இல் பதிவு செய்வது கட்டாயம் ஆகும்.

நிதி இழப்பு சைபர் குற்றங்களில் பணத்தை இழந்தவர்கள் NCRP இல் பதிவு செய்து, பிறகு தங்கள் எல்லைக்கு உட்பட்ட சைபர் குற்ற போலீஸ் நிலையத்தை அணுகி, புகார் அளிக்கலாம். பொதுமக்களாகிய அனைவரும் விழிப்புடன் இருங்கள் எந்த பணமும் ஈசியாக தங்களுக்கு வந்து விடாது என்று நினைவில் கொண்டு சிந்தித்து செயல்படுங்கள்.


பொதுமக்கள் இவ்வகையான அதிக லாபம் தரும் முதலீட்டு விளம்பரங்கள். போலியான முதலீட்டு செயலிகள். வலைதளங்களை பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அறியாத வங்கி கணக்குகளில் பணத்தை செலுத்த வேண்டாம் என்றும் சைபர் குற்றங்களுக்கான ஹெல்ப்லைன் எண் 1930 அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கவும்.

– J.தனசேகர்

# பழங்குடியினர் பகுதிகளில் உள்ளூர் சுற்றுலா மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 1000 பழங்குடியினர் தங்கும் இல்லங்கள் மேம்படுத்தப்படும்

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் 2024 செப்டம்பர் 18 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், பழங்குடியினர் பெரும்பான்மையாக உள்ள கிராமங்கள் மற்றும் முன்னேற விரும்பும் மாவட்டங்களில் உள்ள பழங்குடியின குடும்பங்களுக்கு செறிவூட்டப்பட்ட பாதுகாப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம், பழங்குடி சமூகங்களின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, 79,156 கோடி ரூபாய் மொத்த ஒதுக்கீட்டில் (மத்திய அரசு: ரூ.56,333 கோடி மற்றும் மாநில அரசு: ரூ.22,823 கோடி) பிரதமரின் பழங்குடியினர் உன்னத கிராமம் இயக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது சுமார் 63,000 கிராமங்களை உள்ளடக்கி, 5 கோடிக்கும் அதிகமான பழங்குடியின மக்களுக்கு பயனளிக்கும். இது 30 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள 549 மாவட்டங்கள் மற்றும் 2,740 வட்டாரங்களை உள்ளடக்கும்.

இந்த இயக்கம் 25 தலையீடுகள் / திட்டங்களை உள்ளடக்கியது, அவை 17-வரிசை அமைச்சகங்களால் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அமைச்சகமும் / துறையும் அடுத்த 5 ஆண்டுகளில் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்டத்தின் (டிஏபிஎஸ்டி) கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள் இது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொறுப்பேற்கும்.




இந்த இயக்கத்தின் திட்டங்களில் ஒன்று சுற்றுலா அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பழங்குடியினர் இல்லங்களில் தங்கும் வசதி-ஸ்வதேஷ் தர்ஷன் ஆகும். பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள சுற்றுலா வளங்களை முழுமையாக்கும் வகையிலும், பழங்குடியின மக்களுக்கு மாற்று வாழ்வாதாரத்தை வழங்கவும், சுற்றுலா அமைச்சகம் மூலம் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் 1000 வீடுகள் மேம்படுத்தப்படும். சுற்றுலா வசதி உள்ள கிராமங்களில், பழங்குடியின குடும்பங்கள் மற்றும் கிராமத்தில் ஒரு கிராமத்தில் 5-10 தங்கும் இல்லங்கள் கட்டுவதற்கு நிதி வழங்கப்படும். ஒவ்வொரு குடும்பமும் இரண்டு புதிய அறைகள் கட்ட ரூ.5.00 லட்சமும், தற்போதுள்ள அறைகளை புதுப்பிக்க ரூ.3.00 லட்சமும், கிராம சமுதாய தேவைகளுக்கு ரூ.5 லட்சமும் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் பழங்குடியின மக்கள் தொகை





10.45 கோடியாக உள்ளது. மேலும் 705-க்கும் மேற்பட்ட பழங்குடி சமூகங்கள் நாடு முழுவதும் பரவியுள்ளன, தொலைதூரங்களிலும், அடைவதற்கு கடினமான பகுதிகளிலும் அவர்கள் வசிக்கின்றனர். பிரதமரின் பழங்குடியினர் உன்னத கிராம இயக்கம், மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் சமூக உள்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம் ஆகியவற்றில் உள்ள முக்கியமான இடைவெளிகளை ஒருங்கிணைப்பு மற்றும் பரவல் மூலம் செறிவூட்டவும், பழங்குடியினர் பகுதிகள் மற்றும் சமூகங்களின் முழுமையான மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள பழங்குடி கிராமங்கள், பிரதமர் விரைவு சக்தி தளத்தில் சம்பந்தப்பட்ட துறையால் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளுடன் வரைபடமாக்கப்படும். பிரதமர் விரைவு சக்தி தளத்தில் நிதி முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு, சிறப்பாக செயல்படும் மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

– சரவணன் @ மணிகண்டன்

# வருமானவரி அலுவலகத்தில் வரி பிடித்தம் தொடர்பான விழிப்புணர்வு பயிலரங்கு



வருமானவரி செலுத்துவோருக்கு, வரி பிடித்தம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயிலரங்கு ஒன்று சென்னை வருமானவரி அலுவலகத்தில் நடை பெற்றது. இதில் பல்வேறு வணிகப் பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

சென்னை வருமானவரி அலுவலகம், இந்திய கணக்கு மதிப்பீட்டாளர் சங்கத்துடன் சேர்ந்து இந்த விழிப்புணர்வு பயிலரங்கை நடத்தியது. பட்டயக் கணக்காளர் டாக்டர் கோபால கிருஷ்ண ராஜூ இதனை நெறியாளுகை செய்தார்.

திரு எல்.ராஜாராமன், திரு கே.செந்தில்குமார், திரு வி.தீபன் குமார் ஆகிய வருமானவரி அலுவலர்கள், வரி பிடித்தத்தை செயல்திறன் மிக்க வகையில் அமல்படுத்துதல், வரி பிடித்தம் செய்பவர்களில் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், வரி பிடித்தம் செய்வதை மீறினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை பற்றி விளக்கி உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து வரி பிடித்தம் தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது. இது தொடர்பாக எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு அலுவலர்கள் விளக்கமளித்தனர். – கா.கலைமணி

# புகையிலை பயன்பாட்டைக் குறைக்கும் வழிமுறைகளை தீவிரப்படுத்தவும்: மத்திய அமைச்சகம்!




மாநில அரசுகள் புகையிலை பயன்பாட்டைக் குறைப்பது தொடர்பான வழிகாட்டுதல்களை தீவிரமாக செயல்படுத்துமாறு மத்திய கல்வி மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம் இன்று தெரி-வித்துள்ளது.

கல்வி அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் செயலர்கள் மாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்கு வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின்படி, சிகரெட் மற்றும் பிற புகையிலை பொருள்கள் சட்டம், 2003 இன் விதிகளுக்கு இணங்க, புகையிலை இல்லா கல்வி நிறுவனங்கள் திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களைக் கடுமையாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில், குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே புகையிலை பயன்பாடு அதிகரித்திருப்பதன் ஆபத்தைக் அடிக்கோடிட்டு காட்டுகிறது.

உலகளாவிய இளைஞர் புகையிலை பயன்பாடு குறித்த கணக்கெடுப்பு 2019 இன் படி இந்தியாவில் 13 முதல் 15 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவர்களில் 8.5 சதவீதம் பேர் புகையிலையை வெவ்வேறு விதமாக உட்கொள்வதைக் குறிப்பிட்டுள்ளது.

இதில், கவலையளிக்கும் விதமாக ஒரு நாளைக்கு 5,500 சிறுவர்கள் வரை புதிதாக புகையிலை பயன்படுத்தத் தொடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ந்து புகையிலை பயன்படுத்துபவர்களில் 55 சதவீதம் பேர் 20 வயதிற்கு முன்பே இந்தப் பழக்கத்தைத் தொடங்கியதாகவும், இதன் விளைவாக இளம் வயதினர் பலரும் வெவ்வேறு வகையான போதைப் பொருள் பயன்பாட்டுக்கு மாறுவதாகக் கூறப்படுகிறது.

புகையிலை பழக்கத்தின் ஆபத்துகளில் இருந்து இளைஞர்களைப் பாதுகாக்க அனைவரின் கூட்டு முயற்சிகளின் தேவையை இந்த ஆலோசனை வலியுறுத்துகிறது. மேலும், புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

புகையிலை மற்றும் மின்னணு சிகரெட் பயன்பாட்டிலிருந்து சிறார்களையும் இளைஞர்களையும் பாதுகாப்பதற்காக, புகையிலை இல்லாத கல்வி நிறுவனங்கள் தொடர்பாக தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சகம் வெளியிட்டது.

மேலும், சமூகப் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டுச் சங்கத்துடன் பள்ளிக் கல்வித் துறை இணைந்து உலக புகையிலை எதிர்ப்பு தினத்தில், புகையிலை இல்லாத கல்வி நிறுவனங்கள் திட்டத்தின் அமல்படுத்துவதற்கான கையேட்டை உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனைக் கடந்த மே 31 அன்று அனைத்து மாநில கல்வி நிறுவனங்களுக்கும் வழங்கியிருந்தனர்.

இந்த புகையிலை எதிர்ப்பு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்த கல்வி நிறுவனங்களுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட கையேடு முக்கிய ஆதாரமாக செயல்படுகிறது.

இதன்மூலம், கல்வி நிறுவனங்களில் ஆரோக்கியமான மற்றும் புகையிலை இல்லாத சூழலை உருவாக்க வேண்டும் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களும் புகையிலை இல்லாததாக மாற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

– M.திலிப்குமார்

# ரூபாய் 2000 மேல் பரிவர்த்தனை செய்தால் ஜிஎஸ்டி பிடிக்கப்படும்!




ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேல் பரிவர்த்தனை மேற்கொண்டால் ஜிஎஸ்டி படிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

வளர்ந்து வரும் டிஜிட்டல் இந்தியாவில் பலரும் டிஜிட்டல் முறைப்படி பணம் பரிமாற்றம் செய்கின்றனர், இதன் மூலம் ஆன்லைன் பரிவர்த்தனை அதிகம் நடக்கிறது, மேலும் டெபிட் கார்டு கிரெடிட் கார்டு மூலம் செலுத்தும் ரூபாய் இரண்டாயிரத்திற்கு 18% ஜிஎஸ்டி பிரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மதிய நிதி அமைச்சர் சீதாராமன் தலைமையில் செப்டம்பர் 9 அன்று ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் 18 சதவீதம் வரிவிதிப்பு குறித்து தகவல் வெளிவரும் என அறிவித்துள்ளது, மேலும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட காரணத்தினால் அனைவரும் இருந்த இடத்திலிருந்து பணம் மாற்றுவது பணத்தை பெறுவது என கையாலப்படுகிறோம் இதன் மூலம் ஜிஎஸ்டிகளும் பிடிக்கப்படும் என்று மதிய அமைச்சகம் மக்கள் பலரும் அதிர்ந்து வருகின்றனர்.

– R.ஹரிகிருஷ்ணன்

# உலகளாவிய சைபர் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா முதல் அடுக்கு நிலையை அடைந்தது

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் வெளியிட்டுள்ள உலகளாவிய சைபர் பாதுகாப்பு குறியீடு 2024-ல் முதல் அடுக்கு அதாவது அடுக்கு 1 நிலையை அடைவதன் மூலம் இந்தியா தனது இணைய பாதுகாப்பு முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. 100க்கு 98.49 மதிப்பெண்களுடன், இந்தியா 'முன்மாதிரி' நாடுகளின் வரிசையில் இணைகிறது, இது உலகெங்கிலும் உள்ள இணைய பாதுகாப்பு நடைமுறைகளுக்கு வலுவான உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது.

உலகளாவிய சைபர் பாதுகாப்பு குறியீடு 2024 இல் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோடல் ஏஜென்சியாக தொலைத் தொடர்புத் துறை (DoT) முக்கிய பங்கு வகித்தது. தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா, இந்த சாதனையை இந்தியாவுக்கு பெருமையான தருணம் என்று பாராட்டினார். “இந்த நட்சத்திர சாதனை சைபர் பாதுகாப்பிற்கான நமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. மேலும் இந்தியாவின் தொலைத் தொடர்புத் துறையின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது” என்று அவர் கூறினார்.

சைபர் பாதுகாப்பில் இந்தியாவின் வலுவான செயல்திறன், சைபர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், சைபர் கிரைம் சட்டங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு தரங்களுக்கான வலுவான கட்டமைப்புகளை நிறுவுவதற்கும் இந்திய அரசு மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளால் இயக்கப்படுகிறது. நாட்டின் சட்ட நிறுவனங்கள் இணைய பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளவும், குற்றங்களை எதிர்த்துப் போராடவும், அதன் டிஜிட்டல் உள்கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்யவும் நன்கு தயாராக உள்ளன.



இந்தியாவின் சைபர் பாதுகாப்பு உத்தியில் கல்வி மற்றும் விழிப்புணர்வு மையமாக உள்ளது. இலக்கு பிரச்சாரங்கள் மற்றும் கல்வி முயற்சிகள் தனியார் தொழில், பொது நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் கல்வியாளர்கள் உள்ளிட்ட துறைகளில் பாதுகாப்பான ஆன்லைன் நடைமுறைகளை ஊக்குவித்துள்ளன. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி பாடத்திட்டத்தில் சைபர் பாதுகாப்பை ஒருங்கிணைப்பது, அறிவார்ந்த மற்றும் நன்கு தயாரிக்கப்பட்ட டிஜிட்டல் குடிமக்களை வளர்ப்பதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கூடுதலாக, ஊக்கத்தொகைகள் மற்றும் மானியங்கள் திறன் மேம்பாட்டை ஊக்குவித்துள்ளன மற்றும் இந்தியாவின் இணைய பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்துள்ளன. சர்வதேச ஒத்துழைப்புகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒப்பந்தங்களுடன், இந்தியாவின் திறன் வளர்ப்பு மற்றும் தகவல் பகிர்வு முயற்சிகளை மேலும் வலுப்படுத்தி, இணைய பாதுகாப்பில் உலகளாவிய தலைவராக அதன் பங்கை உறுதிப்படுத்தியுள்ளது.

– K.மாரிதுரை



தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly - September 2024
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

